செய்தி வெளியீடு எண் :02 நாள்:01.11.2019

**தேனி மாவட்டம்**
**மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் நடத்திட விண்ணப்பிக்கலாம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**

********

தேனி மாவட்டத்தில் 2019 -2020ஆம் நிதியாண்டில் மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைத்திட ஆவின் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய முன் வைப்புதொகை ரூ.25,000/- மற்றும் ஆவின் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு பயனாளிகளுக்கு மான்யமாக ரூ.25,000/- எனவும் ரூ.50,000/-ஐ மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் உயர்த்தி மான்யமாக வழங்கப்படவுள்ளது.

தேனி மாவட்டத்தை சேர்ந்த 18-வயதுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்து அதன் விபரத்துடன் மாற்றுத்திறனாளிகள் தேசிய அடையாள அட்டை நகல், ஆதார் அட்டை நகல் 1, பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் 2 ஆகியவற்றின் நகல்களுடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், பின்புறம், தேனி என்ற முகவரியில் விண்ணப்பித்திட வேண்டும்.

எனவே, மாவட்டத்தில் உள்ள 18-வயதுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைப்பதற்கு விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**